செ.வெ.எண்:28/2019 நாள்:14.10.2019

# பத்திரிக்கைச் செய்தி

சிவகங்கை மாவட்ட முன்னாள் படைவீரர்கள்/படைப்பணியாற்றுவோர்/ சார்ந்தோர்களுக்கான சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிமன்ற கூடத்தில் (D.D.C Hall-ல்) 21.10.2019 திங்கட்கிழமை அன்று பிற்பகல் 4.00 மணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.ஜெயகாந்தன்,இ.ஆ.ப., அவர்களால் நடத்தப்படவுள்ளது. சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த படைவீரர் / முன்னாள் படைவீரர் / சார்ந்தோர் 21.10.2019 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் நடத்தப்படும் முன்னாள் படைவீரர் சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டத்திற்கு வருகை புரிந்து தங்களது குறைகளை இரட்டைப் பிரதிகளில் மனுவாக மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் நேரடியாக வழங்கி தீர்வு காணுமாறு சிவகங்கை மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர், திரு.இரா.வரதராஜன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு::**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்**
**சிவகங்கை.**